DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 13/2021**

**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தங்கவேல் | Caste | : | |
| Father Name | : | துரைசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **21.07.2026.**

**PW - 24**

**(1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் இறுதியாக உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 30.04.2020 ல் பணிஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 19.01.2020 அன்று திருச்சி மாவட்டம், லால்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது திருச்சி மாவட்டம், லால்குடி தாலுக்கா, பெருவளநல்லூர் வடக்கு புதுகாலனியை சேர்ந்த பெரியசாமி மகன் குணசேகரன் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான புகார் ஒன்றை கொடுத்தார். அதை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.22/2020 இதச பிரிவு 302 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.15** ஆகும். பிறகு, மேற்படி முதல் தகவல் அறிக்கையையும், அசல் புகாரையும் காவலர் மூலம் லால்குடி குற்றவியல் நீதித்துறை பொறுப்பு நடுவருக்கு அனுப்பி வைத்தேன். அதன் நகல்களை மேல் அதிகாரிகளுக்கு

அனுப்பிவைத்தேன். விசாரணை நகலை ஆய்வாளர் முத்துகுமார் என்பவர் விசாரணைக்காக வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 குணசேகரன் கொடுத்த புகாரில் கால்வாயில் என் அப்பாவின் உடல் குப்புற கவிழ்ந்த நிலையில் கழுத்தில் துண்டு மட்டும் போட்ட நிலையில் உடம்பில் துணியில்லாமல் இறந்துகிடந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் தூக்க சென்றபோது தீயணைப்பு துறையும் வந்துவிட்டதால் என்ற வாசகம் புகாரில் உள்ளது என்றால் சரிதான். அவர்களுடன் சேர்ந்து என் அப்பாவை மேலே தூக்கியதாக என்ற வாசகம் புகாரில் உள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.